விவசாய பல்கலைக் கழகம்

*242 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கோவையில் விவசாய பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) இம்மாநிலத்தில் விவசாயப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுவதைக் குறித்து அரசாங்கம் இன்னும் முடிவு எதுவும் எடுக்கவில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாயப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : அதுதான் சொன்னேன் இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை என்று.

திரு. எஸ். முருகையன் : தஞ்சைக்கு அடுத்தபடியாக உணவு தானியம் உற்பத்தி செய்யக்கூடியது வட ஆற்காடு மாவட்டம். அங்கே வாழவைத்தான் பகுதியிலே 300 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் சாகுபடி செய்யாமல் இருந்து வருகின்றன. அவற்றைச் சாகுபடி செய்ய வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு விவசாய பல்கலைக் கழகம் ஏற்படுத்த முயற்சி செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒரு இடத்தில் விவசாயம் செய்ய வேண்டும் என்பதற்காக பல்கலைக் கழகம் ஆரம்பிப்பதற்கில்லை.

திரு. மா. தண்டாயுதபாணி : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தஞ்சையில் ஒரு விவசாய கல்லூரி எதிர்பார்த்தோம், கிடைக்கவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது தஞ்சைக்கு முதலிடம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : விவசாயத்தில், குறிப்பாக, தஞ்சை நெல் களஞ்சியமாக இருந்து உணவு கொடுக்கிறது. இருந்தாலும், விவசாயப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்படுமா என்பது பின்னால் தான் முடிவு செய்யப்படும்.

கள்ளக்குறிச்சி வட்டத்தில் விவசாயப் பள்ளி

*243 கேள்வி.—திரு. எல். ஆனந்தன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தாலுக்காவில் ஒரு விவசாயப் பள்ளி ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது, எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.